மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.02/2023
அ.வ.எண்.37/2023

பழனிசாமி ... மனுதாரர்/வாதி

/எதிராக/

தங்கவேல் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 21.03.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.P.சுவாமிநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.மதிவாணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதிகள் 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதி/மனுதாரரால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதி/எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து மனுதாரரின் தந்தைக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு, அவர் அனுபவத்தில் இருந்து வந்து, அவர் இறந்த பிறகு அவரது வாரிசுகளான மனுதாரரும், அவரது இரண்டு சகோதரர்களும் கூட்டாக அனுபவத்தில் இருந்த சொத்தை மனுதாரரும், மனுதாரரின் சகோதரிகளும் கடந்த 06.02.2008 ம் தேதியில் பாகம் பிரித்த சொத்தாகும். மேற்படி பாகப்பிரிவினையின் மூலம் தாவா சொத்து மனுதாரரது அனுபவத்திலிருந்து வருகின்றது. தாவா

சொத்துவிபரத்தில் தாவா சொத்து 3 அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ளது.

(ii) தாவா 1வது அயிட்ட சொத்து மனுதாரரது கூட்டு சுவாதீனத்தில் இருக்கும்போதே மனுதாரர் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பே தாவா 1வது அயிட்ட சொத்தில் வீடு கட்டி வசித்துக் கொண்டு தாவா சொத்துகளை அனுபவித்து வந்த நிலையில், மனுதாரரது சித்தப்பா மகன் ராஜமுத்து அவரது நிலத்தை மனுதாரருக்கு விற்பனை செய்வதாக உறுதி அளித்தார். அதனால் மனுதாரர் கடந்த 20 ஆண்டுகளாக ராஜமுத்துவின் நிலத்தை குத்தகைக்கு அனுபவித்து பாதுகாத்து வந்தார். எதிர்மனுதாரர் தாவா சொத்திற்கு பக்கத்து நிலத்தை விலைக்கு வாங்கியவர் ஆவார். எதிர்மனுதாரர் 2021ம் வருடம் மேற்கண்ட ராஜமுத்துவிடம் விலைக்கு வாங்கிய சொத்து ராஜமுத்துவிற்கு பாகப்பிரிவினைப்படி பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தாகும். ராஜமுத்து சேலத்தில் இருப்பதால் அவரது சொத்தை மனுதாரரிடம் வாய்மொழியாக குத்தகைக்கு கொடுத்தார்.

(iii) 20 ஆண்டுகாலமாக குத்தகைக்கு மனுதாரர் இருந்து அனுபவித்து வந்த நிலையில், மனுதாரருக்கு தெரியாமல் 2021ம் வருடம் எதிர்மனுதாரர், ராஜமுத்துவிடம் நயமாக பேசி அவரை ஏமாற்றி அவரது நிலத்தை விலைக்கு வாங்கினார். எதிர்மனுதாரர் விலைக்கு வாங்கிய ஓராண்டு காலம் அவரது நிலத்திற்கு வரவில்லை. ஒரு வருடத்திற்கு பிறகு அவரது நிலத்திற்கு வந்து மனுதாரரிடமிருந்து மனுதாரரின் அனுபவத்தை வெளியேற்றிய போது தான் மனுதாரருக்கு ராஜமுத்து நிலத்தை எதிர்மனுதாரர் விலைக்கு வாங்கிய விபரம் தெரியவந்தது. மேலும் எதிர்மனுதாரர் கடந்த ஓராண்டு காலமாகவே தாவா சொத்தையும் மனுதாரரிடம் குறைந்த விலைக்கு கேட்டார். அதனை மறுத்ததால் கோபம் கொண்ட எதிர்மனுதாரர் தாவா சொத்திலுள்ள மனுதாரரின் அனுபவத்தை பல்வேறு வழிகளில் இடைஞ்சல்கள் செய்து வருகின்றார்.

(iv) மேலும் கடந்த 25.12.2022ம் தேதியில் எதிர்மனுதாரர், அவரது ஆட்களுடன் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து தாவா சொத்தை விலைக்கு கொடுக்காவிட்டால் தாவா சொத்தை அனுபவிக்க விடமாட்டேன் என கூறி மிரட்டினர். கடந்த 30.12.2022ம் தேதியில் எதிர்மனுதாரரே தவறான சங்கதிகள் அடங்கிய ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை மனுதாரருக்கு அனுப்பியதற்கு மனுதாரர் 25.01.2023ம் தேதியில் தகுந்த பதிலுரையை

அனுப்பினார். மீண்டும் கடந்த 12.03.2023ம் தேதியில் எதிர்மனுதாரர் அவரது ஆட்களுடன் தாவா சொத்தை விலைக்கு கேட்டு மனுதாரரை மிரட்டினார். அதனை ஊர் பெரியோர்களை வைத்து எதிர்மனுதாரரை அழைத்து தாவா சொத்தை விலைக்கு கேட்டு மனுதாரரின் சுவாதீனத்தை இடைஞ்சல்கள் செய்வதை பற்றி கேட்டதற்கு தாவா சொத்தை எதிர்மனுதாரருக்கு விலைக்கு கொடுக்காவிட்டால் மனுதாரரை தாவா சொத்தை அனுபவிக்கவிட மாட்டேன் என கூறிவிட்டு சென்றதால் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, குறிப்பாணையின்பேரில் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. தாவா சொத்து மனுதாரரின் தந்தைக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு, அவர் அனுபவத்தில் இருந்து வந்ததும், பிறகு மனுதாரரும், அவரது இரண்டு சகோதரர்களும் கூட்டாக அனுபவத்தில் இருந்த சொத்தை கடந்த 06.02.2008ம் தேதியில் பாகம் பிரித்த சொத்து என்பதையும், மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் தாவா சொத்து மனுதாரரது அனுபவித்திலிருந்து வருகிறது என்பதையும், தாவா சொத்து மனுதாரரது கூட்டு சுவாதீனத்தில் இருக்கும்போதே மனுதாரர் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு வீடு கட்டி வசித்துகொண்டு தாவா சொத்துகளை அனுபவித்து வந்தார் என்பதையும், மனுதாரரது சித்தப்பா மகன் ராஜமுத்து அவரது நிலத்தை மனுதாரருக்கே விற்பனை செய்வதாக உறுதி அளித்தார் என்பதையும், மனுதாரர் கடந்த 20 ஆண்டுகளாக ராஜமுத்துவின் நிலத்தை குத்தகைக்கு அனுபவித்து வருகிறார் என்பதையும் மனுதாரரே தக்க சான்றுகளுடன் நிரூபிக்க கடமைப்பட்டவராகிறார்.

(ii) சொத்துவிவரத்தில் கண்ட தாவா சொத்தானது ஒருபோதும் ராஜமுத்துவிடமிருந்து குத்தகைக்கு எடுத்து மனுதாரர் அனுபவித்து வந்ததே கிடையாது. எதிர்மனுதாரர், ராஜமுத்துவிடம் நயமாக பேசி அவரை ஏமாற்றி அவரது நிலத்தை விலைக்கு வாங்கினார் என்பது பொய்யாகும். ராஜமுத்து வகையறாவின் சொத்துகளை

எதிர்மனுதாரர் 2021ல் கிரயம் பெற்றதிலிருந்து சட்டப்படியான அனுபவத்தில் இருந்து வருகிறார். எதிர்மனுதாரர் மனுதாரரை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற முயற்சி செய்தார் என்பதும், தாவா சொத்தை விலைக்கு கேட்டு பிரச்சனை செய்தார் என்பதும், மனுதாரரின் சொத்துகளில் எதிர்மனுதாரர் இடையூறு செய்தார் என்பதும், கடந்த 25.12.2022ம் தேதியில் எதிர்மனுதாரர், அவரது ஆட்களுடன் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து மிரட்டினார் என்பதும், கடந்த 12.03.2023ம் தேதியில் எதிர்மனுதாரர் அவரது ஆட்களுடன் தாவா சொத்தை விலைக்கு கேட்டு மனுதாரரை மிரட்டினார் என்பதும், ஊர் பெரியோர்கள் முன்னிலையில் மனுதாரரை தாவா சொத்தை அனுபவிக்க விடமாட்டேன் என மிரட்டினார் என்பதையும் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். அப்படி ஒரு நிகழ்வும் நடக்கவில்லை.

(iii) உண்மையில் சின்னமுத்துகவுண்டர் மகன் ராஜமுத்துவுக்கு பாகப்பிரிவினை ஆவண எண்.930/1999ன்படி D ஷெட்யூல் பாகமாக வழங்கப்பட்டு, அவரது சுவாதீனத்தில் இருந்து வந்த நிலமும், மேற்படி சொத்தின் ஒரு பகுதியை ராஜமுத்து அவரது மனைவி சரஸ்வதிக்கு தானசெட்டில்மெண்டின்படி பாத்தியப்பட்ட நிலத்தையும், மேற்படி ராஜமுத்து, சரஸ்வதி மற்றும் அவர்களின் மகனான ஸ்ரீநாத் என்பவரும் சேர்ந்து கடந்த 14.06.2021ம் தேதியில் மனுதாரரிடம் ரூ.2,37,000/-ஐ பெற்றுக்கொண்டு அவர்களுக்கு பாத்தியப்பட்ட இரண்டு அயிட்ட சொத்துகளையும் ஒன்றாக சேர்த்து  எதிர்மனுதாரருக்கு கிரயம் செய்து கொடுத்தனர். இதனால் விரோதம் கொண்ட மனுதாரர் கடந்த 22.12.2022ம் தேதியன்று அத்துமீறி நுழைந்து தகராறு செய்ததோடு தகாத வார்த்தைகளால் திட்டி கற்களால் விவசாய இயந்திரங்களை சேதப்படுத்தி பயிர்செய்வதை தடுத்தனர். இதுகுறித்து 29.12.2022அன்று வருவாய் துறை அலுவலர்களுக்கு எதிர்மனுதாரர் நிலத்தை அளக்க மனு கொடுத்தார்.

(iv) இந்நிலையில் 27.02.2023ம் தேதயில் மனுதாரர், எதிர்மனுதாரரின் சொத்திலிருந்த முட்டுக்கற்களை பிடுங்கி எறிந்துவிட்டு கூரைசாலை போடவும், எதிர்மனுதாரரின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவும் முயற்சி செய்தனர். இதுகுறித்து எதிர்மனுதாரர் அ.வ.எண்.45/2023 என்ற வழக்கை தடையுத்தரவு கோரி மனுதாரர் மீது தாக்கல்

செய்துள்ளார். வழக்கிற்கு வியாஜ்ஜிய மூலம் எழவில்லை. எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் தாவா சொத்து குடும்ப பாகப்பிரிவினைப்படி மனுதாரரது அனுபவத்திலிருந்து வருகின்றது என்றும், தாவா 1வது அயிட்ட சொத்தில் மனுதாரர் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் தாவா சொத்திற்கு பக்கத்தில் உள்ள மனுதாரரின் சித்தப்பா மகன் ராஜமுத்து என்பவரின் நிலத்தை விலைக்கு வாங்கியவர் என்றும், தாவா சொத்தை மனுதாரர் குறைந்த விலைக்கு எதிர்மனுதாரருக்கு விற்க மறுத்ததால் விரோதம் கொண்டு கடந்த 25.12.2022ம் தேதியில் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து மனுதாரரின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்தார் என்றும், பின் மீண்டும் கடந்த 12.03.2023ம் தேதியில் எதிர்மனுதாரர் தாவா சொத்தை விலைக்கு கேட்டு மனுதாரரை மிரட்டியதால் எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) அதே சமயத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரின் சித்தப்பா மகன் ராஜமுத்துவுக்கு பாகப்பிரிவினைப்படி பாத்தியப்பட்ட சொத்துகளை கடந்த 14.06.2021ம் தேதியில்

எதிர்மனுதாரர் கிரயம் பெற்றதால் விரோதம் கொண்ட மனுதாரர் கடந்த 22.12.2022ம் தேதியன்று அத்துமீறி நுழைந்து கற்களால் விவசாய இயந்திரங்களை சேதப்படுத்தி பயிர்செய்வதை தடுத்து, இடையூறு செய்தார் என்றும், இந்நிலையில் வருவாய் துறையினரிடம் எதிர்மனுதாரர் நிலத்தை அளக்க மனு கொடுத்துள்ளார் என்றும், கடந்த 27.02.2023ம் தேதயில் மனுதாரர், எதிர்மனுதாரரின் சொத்திலிருந்த முட்டுக்கற்களை பிடுங்கி எறிந்துவிட்டு கூரைசாலை போடவும், எதிர்மனுதாரரின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவும் முயற்சி செய்தார் என்றும், அதனால் மனுதாரருக்கு எதிராக அ.வ.எண்.45/2023 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் வாதி/மனுதாரரால் தாவா சொத்தில் அத்துமீறி பிரவேசிக்கவோ, மனுதாரரின் சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்யவோ கூடாது என பிரதிவாதி/எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரின் உறவினரிடமிருந்து அவரது குடும்ப பாக சொத்தை எதிர்மனுதாரர் கிரயம் பெற்றதால் விரோதம் கொண்டு மனுதாரர் தான் பல்வேறு வகைகளில் எதிர்மனுதாரரின் சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(iv) இச்சூழ்நிலையில் மனுதாரர் தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது, தாவா சொத்திலுள்ள தனது சட்டப்படியான சுவாதீன அனுபவத்தை மனுதாரர் நிரூபித்துள்ளாரா? என்பதும், மனுதாரரின் சட்டப்படியான சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர் இடையூறு செய்தாரா? என்பதுமே ஆகும்.

(vi) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vii) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரரால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.04.16 17:01:54 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 06.02.2008 | பாகப்பிரிவினை பத்திரம் | பதிவுநகல் |
| ம.சா.ஆ.2 | 15.11.2022 | கணிணி பட்டா எண்.1834 | கணிணிநகல் |
| ம.சா.ஆ.3 | | அ பதிவேடு விவரங்கள் | கணிணிநகல் |
| ம.சா.ஆ.4 | 21.02.2023 | புல வரைபடங்கள் (3 எண்ணிக்கை) | கணிணிநகல் |
| ம.சா.ஆ.5 | 07.02.2023 | வீட்டுவரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.6 | 30.03.2013 | வீட்டுவரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.7 | 25.01.2022 | வீட்டுவரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.8 | 18.10.2022 | வீட்டுவரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.9 | 30.12.2022 | வழக்கறிஞர் அறிவிப்பு | அசல் |
| ம.சா.ஆ.10 | 25.01.2023 | பதிலறிவிப்பு | நகல் |
| ம.சா.ஆ.11 | | அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.04.16 17:02:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.